DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 371/2019
Prosecution Witness PW 15
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. K. மாடசாமி | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **-15.10.2024.**

எதிரி ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது மதுரை மாநகர், கே. புதூர் காவல்நிலையத்தில் சட்ட ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஏற்கனவே 2018 ஆம் ஆண்டில் உசிலம்பட்டி வட்ட காவல் ஆய்வாளராக பணியாற்றி வந்தபோது, கடந்த 15.09.2018 அன்று உசிலம்பட்டி நகர் காவல்நிலைய கு.எண்.654/2018, U/sec. 341, 294(b), 302, 506(ii) IPC ன் படி வழக்கின் முதல் தகவல்அறிக்கையை உசிலம்பட்டி நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு. இராமகிருஷ்ணன் என்பவர் பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்ததை பெற்றுக் கொண்டு, அன்றைய தினம் 16.09.2018 அன்று 01.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு சாட்சிகள் மகாலிங்கம், ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். என்னிடம் ....

காட்டப்படும் மாதிரி வரைபடம் நான் தயார் செய்தது தான் அது அ.சா.**ஆ.12** ஆகும். பின்பு, அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இரத்தம் பட்ட மண் மற்றும் இரத்தம் படாத மண் ஆகியவற்றை சேகரித்தேன். பின்பு, சாட்சிகள் அருள்செல்வி, அறிவழகன், வெண்மணி சந்திரன், சிவா, லோகராஜா, ராஜ், மகாலிங்கம் , ரவிக்குமார் ஆகியோர்கள் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, 16.09.2018 அன்று காலை 07.30 மணிக்கு அரசு தலைமை மருத்துவமனை, உசிலம்பட்டியில் உள்ள சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் இறந்த அறிவழகனின் பிரேதத்தினை பஞ்சாயத்தார்களான மகேந்திரன், மகாலிங்கம், முரளி, செல்வம், ஜோதிபாண்டி ஆகியோர் முன்னிலையில் பிரேதத்தை பார்வையிட்டு அன்று காலை 07.30 மணி முதல் 10.30 மணிக்குள் பிரேத விசாரணை முடிந்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து, பிரேத பரிசோதனைக்காக உசிலம்பட்டி அரசு மருத்துவமனை அலுவல் மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதத்தை காவலர் 2163 திரு. ரமேஷ் என்பவர்மூலம் கொடுத்தனுப்பினேன். நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கைதான் என்னிடம் காட்டப்படுவது அது அ.சா.**ஆ. 13**

ஆகும். பின்பு, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை நல்லடக்கம் செய்யவேண்டி அவரின் உறவினர்களிடம் ஒப்படைத்துவிட்டு, பின்பு பிரேதத்தின் மீது போர்த்தியிருந்த இரத்தக்கறை படிந்த காபி கலர் சட்டை அதில் G fix என்ற லேபிள் இருந்தது. லைட் மஞ்சள் கலர் பேண்ட் G fix என்ற லேபிள் இருந்தது. மேற்படி காவலர் திரு. ரமேஷ் என்பவர் மூலம் கையகப்படுத்தி படிவம் 95 ன் மூலம் ஆய்விற்கு அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் பேண்ட் சட்டை தான் மேற்படி பிரேதத்தின் மீது இருந்ததாகும். அவை முறையே சா.பொ **7** மற்றும் சா.பொ. **8** ஆகும். நான் தயார் செய்த படிவம் 95 ஆனது அ.சா.ஆ.**14** வரிசை ஆகும். பின்பு, எதிரி முருகையாவை தேடிச் சென்றபோது 16.09.2018 அன்று காலை 11.00 மணிக்கு உசிலம்பட்டி தீனா விலக்கு அருகில் நடந்து வந்தவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் வாசுமுத்து, செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்து, அவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் பிரகாரம் இவ்வழக்கில் குற்றச் செய்கைக்கு பயன்படுத்திய அருவாள் ஒன்றும், இரத்தம் பட்ட சிமிண்ட் கலர் பேண்ட், இரத்தக்கறைபடிந்த முழுக்கை சட்டை, ...

இரத்தக்கறை படிந்த கருப்பு கலர் Xinluze என்று குறிப்பிடப்பட்டிருந்த கருப்பு கலர் பேக் ஒன்றையும் 12.30 மணிக்கு சாட்சிகள் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில்அத்தாட்சியில் கைப்பற்றி எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து எதிரியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்றும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி பகுப்பாய்விற்காக அனுப்பி வைத்தேன். நான் தயார் செய்த படிவம் 91 ஆனது ஏற்கனவே அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்பட்டுவிட்டது. பின்பு, த.கா. திரு. காத்தப்பன், காவலர் திரு. ரமேஷ், சார்பு ஆய்வாளர் திரு. ராமகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்பு, படிவம் 95 ல் கைப்பற்றப்பட்ட இரத்தம் பட்ட மண் மற்றும் இரத்தம் படாத மண் ஆகியவற்றை பகுப்பாய்விற்காக நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். நான் கொடுத்த அந்த வேண்டுகோள் கடிதமானது அ**.**சா**.**ஆ**. 15** ஆகும். பின்பு, சாட்சிகள் அருள்செல்வி, அறிவழகன், வெண்மணி சந்திரன், சிவா ஆகியோர்களுக்கு 164 Cr.P.C மூலம் வாக்குமூலம் பதிவு செய்ய ...

உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அளித்தேன். அதன் பிரகாரம் 25.10.2018 அன்று கணம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண். 1, உசிலம்பட்டி அவர்கள் மேற்படி 4 நபர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்தார். அதன் நகல்களை பெற்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 06.12.2018 அன்று உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனை சென்று மருத்துவர் திரு. பாலமுருகன் என்பவரை விசாரித்தும், பின்பு மருத்துவர் திரு. மணிகண்டன் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 07.12.2018 அன்று வட்டாரதடய அறிவியல் ஆய்வகம் சென்று அலுவலர் திரு. நவநீதகிருஷ்ணன் என்பவரை விசாரித்து பகுப்பாய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படுவது திரு. நவநீத கிருஷ்ணன் அவர்கள் கொடுத்த அறிக்கைகள்தான் அவைகளில் உயிரியல் அறிக்கையானது அ**.**சா**.**ஆ**. 16** ஆகும், மேலும் குருதி வடிநீரியல் அறிக்யையானது அ**.**சா**.**ஆ**. 17** ஆகும். பின்பு, இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டிருந்த 2 ம்எதிரியான சாந்தா தேவி என்பவர் சம்பவ தினத்தன்று தஞ்சாவூர் மாவட்டம், வல்லம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் காலை முதல் மாலை வரை பணியில் ..

இருந்தார் என்ற மேற்படி பள்ளி தலைமை ஆசிரியர் அ.சா. 11 ஆன திரு. குணசேகரன் என்பவர்மூலம் தெரியவந்ததால், மேற்படி 2ம் எதிரி சாந்தா தேவி என்பவரை இவ்வழக்கில் இருந்து நீக்கம் செய்து நீக்க அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு, 15.02.2019 அன்று இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரி முருகையாவின் மீது U/sec.341, 294(b), 302, 506(ii) IPC ன்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். பின்பு, இவ்வழக்கில் 2ம் எதிரியான சாந்தா தேவி என்பவர் பணிபுரிந்த தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சென்று, தலைமை ஆசிரியர் திரு. குணசேகரன் என்பவரை விசாரித்து சான்றிதழ் பெற்றும், மேற்படி பள்ளியில் காலை 09.30 மணி முதல் மாலை 04.00 மணி வரை 10ஆம் வகுப்பு "C" பிரிவு மாணவர்களுக்கு இவ்வழக்கின் 2ம்எ திரியான மேற்படி சாந்தா தேவி என்பவர் சிறப்பு வகுப்பு எடுத்தார் என்பதற்கான சான்றையும் மேற்படி தலைமை ஆசிரியர் திரு. குணசேகரன் என்பவரிடம் பெற்றேன்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை -

எதிரி எந்த திசையில் இருந்து வந்தார் என்ற விபரம் குறித்து முதல் தகவல் அறிக்கையில் காணப்படவில்லை ......

என்றால்சரிதான். ஆனால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்ததாக விசாரணையில் தெரியவந்தது. முதல் தகவல் அறிக்கையில் கிழக்கு மேற்காக செல்லும் ரோட்டில் இவ்வழக்கில் இறந்த அறிவழகனும், அ.சா. 1ம் எந்த திசையில் இருந்து நடந்து வந்தார்கள் என்பது குறித்த விபரம் காணப்பட்டுள்ளதா என்றால் திசை பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆனால், சந்தன மாரியம்மன்கோவில் முன்பு நடந்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தனமாரியம்மன் கோவில் ரோட்டில் எந்த பக்கம் அமைந்துள்ளது என்ற விபரம் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் காணப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று விநாயகர் சதுர்த்தி முடிந்து ஊர்வலம் சம்பவத்திற்கு முன்பு 1 மணி நேரத்திற்கு முன்பாக மேற்படி சந்தன மாரியம்மன்கோவிலைத் தாண்டி சென்றது. அ.சா.ஆ. 13ல் காலம் எண். 3ல் பிரேதம் 15.09.2018 அன்று சுமார் 04.30 மணியளவில் மருத்துவமனையில் மருத்துவரால் இறப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையில் சுமார் 1 கி.மீ தூரத்திற்குள் இருக்கும் என்றால் சரிதான். வழக்கு சம்பவமானது 04.30 மணியளவில் நடந்ததாகவும், புகார் 06.30 மணிநேரம் கழித்து ....

தாமதமாக கொடுக்கப்பட்டதென்றால்சரிதான். ஆனால் புகார்தாரரின் கணவர் தன் கண் முன்னால் வெட்டுப்பட்டு இறந்ததைப் பார்த்து மயக்கமடைந்து, பின்பு மயக்கம் தெளிவாகி புகார் கொடுக்க தாமதமானது. மேற்படி காலதாமதத்திற்கான காணரம் முதல் தகவல் அறிக்கையில் மற்றும் இறுதி அறிக்கையிலும் கூறப்படவில்லைஎன்றால் சரிதான்.

குறுக்குவிசாரணையானது காலமின்மையால் எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் - K. மாடசாமி.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.